# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● டிசம்பர் 1, 2018 Weekly E-paper ● December 1, 2018

உள்ளே...

**ஆரியம் ஏற்படுத்திய ஆறாத புண்கள்!**



– மா.உதயகுமார்



**போராட்டத்திற்கு வழி வகுக்கும் அறிக்கை!**

– தலையங்கம்



# ‘திராவிடம்’ சொல் அன்று, வரலாறு!

– சுப. வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2049 ●டிசம்பர் 1, 2018 Weekly E-paper ●December 1, 2018

# ‘திராவிடம்’ சொல் அன்று, வரலாறு!


டாக்டர் சி.நடேசனார்


டாக்டர் டி.எம்.நாயர்


பிட்டி தியாகராயர்


பனகல் அரசர்

சுப. வீரபாண்டியன்

ஓர் இயக்கம் ஒரு நாட்டிற்கு என்ன செய்தது என்பதுதான் முதன்மையானது. அதனைப் புறந்தள்ளிவிட்டு, அந்த இயக்கத்தின் பெயரில் உள்ள ஒரு சொல்லை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு, அந்த இயக்கத்தையே கொச்சைப்படுத்தும் நோக்கும், போக்கும் இன்று மிகுதியாகிக் கொண்டுள்ளது.

திராவிடம் தமிழ்ச் சொல் இல்லையாம். எனவே, அந்தத் திராவிடத்தினால்தான் இன்று நாட்டில் தமிழ் உணர்ச்சியே இல்லாமல் போய்விட்டதாம். இப்படி நா கூசாமல் சொல்கிறவர்கள் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். அதே போல ஆரியர் திராவிடர் என்பதே ஒரு வரலாற்றுப் பொய் என்றும் சொல்லத் தொடங்கியுள்ளனர். திராவிட இயக்கத்தால் பயன் பெற்ற 'நன்றியுடைய' சிலர், இன்னும் மேலே போய், திராவிட இயக்கக் கொள்கைகளே தோல்வியடைந்து விட்டன என்கின்றனர்.



இப்படிப்பட்ட அவதூறுகளுக்கெல்லாம் விடை சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா என்று நம்மவர்கள் சிலர் கருதுகின்றனர். அவர்களுக்கு விடை சொல்ல வேண்டியதில்லை என்பது சரிதான். ஆனால் பொதுவான மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறதன்றோ!

திராவிட இயக்கம் இந்நாட்டிற்கு என்னென்னவெல்லாம் செய்திருக்கிறது என்பதைப் பட்டியலிடுவது நமக்கு எளிதானது. ஆனால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஒரு சொல்லை மட்டுமே மெத்தப் படித்த மேதாவிகள் சிலர் பிடித்துக் கொண்டிருப்பதால், நாமும், சொற்களின் அடிப்படையிலேயே நம் விடையை முன் வைக்கலாம்.

ஒரு மொழியில் சொற்கள் புதிதாகத் தோன்றுவதும், பழைய சொற்கள் திரிவதும், மறைவதும், பழைய சொற்களுக்கான பொருள் மாறுவதும் எல்லாம் உலக இயற்கை. அப்படிச் சிலவற்றை முதலில் பார்ப்போம். எத்தனையோ சங்க இலக்கியச் சொற்கள் இன்று வழக்கில் இல்லை. ‘படிறு’ என்றால் கொடுமை என்று பொருள். "நுந்தை கடியுடை மார்பில் சிறுகண்ணும் உட்காள்" என்னும் சங்க இலக்கியத் தொடரில் வரும் ‘உட்காள்’ என்னும் சொல்லுக்கு ‘அஞ்சாத’ என்னும் பொருளை நம்மில் எத்தனை பேர் அறிந்துள்ளோம்? எனவே அவையெல்லாம் நம் சொற்கள் இல்லை என்று ஆகிவிடாது.

## முன்பக்கத் தொடர்ச்சி...

அதனைப் போலவே பல சொற்கள் பிற்காலத்தில் வழக்கிற்கு வந்தன. சங்க இலக்கியத்தில் 'திராவிடம்' என்ற சொல் இல்லை என்று சொல்லும் 'பெரும்புலவர்கள்' அவ்விலக்கியங்களில், 'அம்மா, அப்பா' என்ற சொற்களே இல்லை என்பதை அறிவார்களா என்று தெரியாது. 'ஆய், எந்தை' போன்ற சொற்கள்தான் பயன்பாட்டில் அன்று இருந்தன. ஆதலால் அம்மா, அப்பா எல்லாம் தமிழ்ச் சொல் இல்லை என்று சொல்லிவிடலாமா?

அவ்வளவு ஏன், தமிழ் என்ற சொல்தான், தொல்காப்பியம் தொடங்கி எல்லா இலக்கியங்களிலும் காணப்படுகின்றதே அல்லாமல், 'தமிழன்' என்ற சொல் சங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லையே! "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என்று அப்பரும், "செந்தமிழோர் பரவியேத்தும் சீர்கொள் செங்காட்டங்குடி" என்று சம்பந்தரும், "இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன், பெருந்தமிழன் நல்லேன் பெரிது" என்று பூதத்தாழ்வாரும், "பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்" என்று நம்மாழ்வாரும் பாடிய பிறகுதான் தமிழன் என்னும் சொல் பிறந்தது என்று சொல்ல முடியுமா? மற்றவர்களெல்லாம் 'தமிழனை' மறைத்துவிட்டனர் என்பார்களோ!

"தோழமை என்றவன் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ' என்று பாடினான் கம்பன். ஆதலால் கார்ல் மாக்ஸ்க்கும் முந்திய முதல் கம்யூனிஸ்ட் கம்பன்தான் என்று இந்தச் சொல் ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வந்தாலும் வந்து விடுவார்கள்.

திராவிடம் பற்றிய சிலரின் சொல் ஆராய்ச்சி இன்று இப்படித்தான் உள்ளது. தமிழ் என்னும் சொல்லே, தமிழம், திரமிளம், திராவிடம் என்று மருவிற்று என மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதனால் என்ன? அந்தச் சொல்லா முதன்மையானது? அந்தச் சொல்லைக் கொண்டு இயங்கிய இயக்கம் என்ன செய்தது என்பதுதானே பேசப்பட வேண்டியது!



திராவிட இயக்கம், இன, மொழி உணர்வு மேம்படப் பாடுபட்டது. அதற்காகப் பல போராட்டங்களை முன்னெடுத்தது. சமூக நீதிப் போர்க்களங்களைக் கண்டது. பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியது. பெண் விடுதலையைப் பெருமளவிற்கு முன்னெடுத்துச் சென்றது. இவைகளைப் பற்றியெல்லாம் பேச மாட்டார்களாம். திராவிடம் என்னும் சொல் பற்றி மட்டுமே பேசுவார்களாம். என்ன நியாயம் இது?

சொற்களின் பொருள் கூட, காலப்போக்கில் மாறிவிடுமே! பழம் இலக்கியங்களில் மணம் என்னும் பொருளைத் தந்த நாற்றம் என்னும் சொல் இன்று வேறு பொருளில் ஒலிக்கிறதே. சூழ்ச்சி என்பது அன்றைய நாளில் கலந்துரையாடல் என்னும் நற்பொருளைத் தந்தது. இன்று 'சதி' என்னும் வேறு பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

'செம்மல்' என்பது இன்று உயர்ந்த பொருளில் ஆளப்படும் சொல். ஆனால் வள்ளுவர், ஒரு குறளை, " உயிர்ப்ப துளரல்லர் மன்ற செயிர்ப்பவர்/ செம்மல் சிதைக்கலா தார்" என்று அமைத்துள்ளார். இங்கே செயிர்ப்பவர் என்னும் சொல் பகைவரையும், செம்மல் என்னும் சொல் ஆணவத்தையும் குறிக்கின்றது. 'திராவிடம்' சொல் ஆராய்ச்சியாளர்கள் இவற்றை எல்லாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

ஆரிய திராவிடப் போராட்டம் என்பதே, 20 ஆம் நூற்றாண்டில் கால்டுவெல் போன்ற ஐரோப்பியர்களாலும், பெரியார் வழிவந்த திராவிட இயக்கத்தினராலும் கட்டிவிடப்பட்ட கதை என்று சிலர் இப்போது சொல்லத் தொடங்கியுள்ளனர். இவர்கள் அயோத்திதாசப் பண்டிதர், நேரு, அம்பேத்கர் ஆகியோரின் எழுத்துகளைப் படிக்காதவர்கள் போலும். போகட்டும், தமிழின், சங்க, பக்தி இலக்கியங்களையாவது படித்திருப்பார்கள் அல்லவா! 35 ஆண்டுகளுக்கு முன், பேராசிரியர் ந.சஞ்சீவி அவர்களின் மேற்பார்வையில் ஆய்வு செய்த பேராசிரியர் ப.கிருஷ்ணன், தன் ஆய்வேட்டில், "ஆரியர், தமிழர் என்ற பிரிவுணர்ச்சி, 20ஆம் நூற்றாண்டில் தோன்றியதன்று. அது சங்க காலத்திலிருந்தே வருகிறது. சமய காலத்தில் இவ்வுணர்ச்சி தெளிவாகத் தெரிகிறது" என்று எழுதுகின்றார். அந்த நூலுக்கு, திராவிட இயக்கத்தைத் தமிழ் நாட்டில் முதலில் எதிர்த்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி அணிந்துரை வழங்கியுள்ளார்.



**திராவிடம் என்பது வெறுமனே ஒரு சொல் அன்று. ஒரு நூற்றாண்டின் வரலாற்றைத் தன்னுள் சுருக்கி வைத்துக் கொண்டிருக்கும் பேரகராதி.** எல்லாச் சொற்களுக்கும் அகராதியில் பொருள் தேட முடியாது. வரலாற்றில், நடைமுறையில் அவற்றுக்கான பொருளைத் தேடுவோரே உண்மை அறிஞர்கள்!

•

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


## கஜா புயல் நிவாரணம்







*‘கஜா’ புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சிறு உதவியாக 24.11.2018 அன்று, ரூ. 1,28,330 மதிப்புள்ள 175 அரிசி மூட்டைகள், மன்னார்குடி சட்ட மன்ற உறுப்பினர் டி.ஆர்.பி ராஜ மூலமாக வழங்கப்பட்டன.*

*பேரவையின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.சிங்கராயர், சிற்பி செல்வராஜ், மாநில இளைஞரணிச் செயலாளர் இரா. சந்தானம், துணைச்செயாலாளர் ஜெகன், கலை இலக்கியப் பேரவையின் பொறுப்பாளர்கள் புலவர் செல்லக் கலைவாணன், கவிஞர் புண்ணிய மூர்த்தி, கேசவமூர்த்தி ஆகியோர் நேரில் சென்று பொருள்களை வழங்கி வந்தனர்.*

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## போராட்டத்திற்கு வழி வகுக்கும் அறிக்கை!

ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றியுள்ள நிலத்தடி நீரில் மாசு ஏற்படுகிறதா? மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறதா? என்பதைப் பத்து நாட்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும். ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் தாமிரக் கழிவுகளை வெளியேற்ற வேண்டும். இப்படிச் செய்தால் ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்பதில் தவறில்லை. இப்படிச் சொல்கிறது தேசியத் தீர்ப்பாயத்தின் ஆய்வுக்குழு அறிக்கை.

தூத்துக்குடி மீளவிட்டானில் அமைந்துள்ள வேதாந்தாவின் ஸ்டெர்லைட் ஆலையால் நிலத்தடி நீர், காற்று மாசுபடுகிறது. ஆலையில் இருந்து நச்சு வாயு கசிவு ஏற்பட்டதால் அதைச் சுற்றியுள்ள மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளானார்கள்.

அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக கந்தக-டை-ஆக்ஸைடு வெளியேறி அதைச் சுற்றியுள்ள சிற்றூர் வாழ் பொதுமக்கள் கண்ணெரிச்சல், தொண்டை வலி, மூச்சுத் திணறலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

இதுவரை இந்த ஆலையில் 82 முறை நச்சு வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளது. இப்படி ஸ்டெர்லைட் ஆலையினால் ஏற்படும் பெரும் பாதிப்புகள், அங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை நசித்துக் கொண்டிருக்கிறது. காசநோய், புற்றுநோய் போன்ற நோய்களுக்கு மக்கள் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள் இந்த ஆலையால்.

இதனால் தூத்துக்குடி வாழ்மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு ஆலைக்கு எதிராக நடத்திய மே மாத 100 நாள் போராட்டம் சாதாரணமானதன்று.

அந்தப் போராட்டத்தில் பொதுமக்களில் 13 பேர் காவல் துறையினால் குறிவைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதை நாளிதழ்கள், ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டின.

இவ்வளவிற்கும் பிறகு ஆலையை இழுத்து மூடுகிறோம் என்று சொல்லிக் கொண்டு கலெக்டரின் மூலம் ‘சீல்’ வைத்தது தமிழக அரசு. ஆனால், இதுகுறித்துச் சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்ற வேண்டும் என்று சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் ஸ்டாலின் அறிக்கை வாயிலாகக் கேட்டிருந்தும் கூட, அதைச் செய்யாமல் அதைக் கிடப்பில் போட்டது தமிழக அரசு.

இதுவே இன்று வேதாந்தா நிறுவனத்துக்குச் சாதகமாகி, சில நிபந்தனையின் பேரில் ஆலையைத் திறக்கலாம் என்று சொல்லுமளவிற்கு வந்து விட்டது.

நீறு பூத்த நெருப்பை எரிபொருள் ஊற்றி அணைக்க முடியாது.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள், ‘கஜா’ புயல் வேகத்தில் மீண்டும் ஒரு போராட்டம் நடத்த, இந்த அறிக்கை வழி வகுத்திருக்கிறது என்பதை அரசு இப்போதாவது உணர வேண்டும்.




# தமிழ் இலக்கியத்தில் ஆரியம் ஏற்படுத்திய ஆறாத புண்கள்!

**மா.உதயகுமார்**

தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியம் குறித்து நடக்க இருந்த கருத்தரங்கம் தமிழக அரசாலேயே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. “தமிழ் இலக்கியங்கள் மற்றும் இந்து மதப் புனித நூல்களை இழிவுபடுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது” என்று பா.ஜ.கவின் தேசியச் செயலாளர் எச்.ராஜா கண்டனங்களைப் பதிவிட, அதைக் கட்டளையாக ஏற்றுத் தமிழ் வளர்ச்சி மற்றும் கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் மாஃபாய் பாண்டியராஜன் உடனடியாக அதனை ஆதரித்துக் கருத்து வெளியிட, கல்லூரி நிர்வாகத்தினர் நிகழ்ச்சியைத் தள்ளி வைத்துள்ளனர். அவர்களுக்கு யாரைத் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக அமர்த்த வேண்டும் என்று தெரிந்திருக்கிறது.

“தமிழ் இலக்கியப் பதிவுகளில் பெண் வன்கொடுமைகள்” என்னும் தலைப்பில் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் தமிழ் ஆய்வுத் துறை சார்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் டிசம்பர் 6, 7 ஆகிய நாட்களில் நடத்தப்பட இருந்தது.

இக்கருத்தரங்கைத்தான் தடுத்திருக்கிறார்கள். நம்முடைய காவியங்கள் காப்பியங்கள் மீது காவிக்கும்பலுக்கு ஏன் இந்த அக்கறை? தமிழை ‘நீச’ பாஷை என்று தீட்டுக் கழித்தவர்களுக்குத் தமிழ் இலக்கியங்கள் மேல் ஏன் இந்தப் பாசம்?



இந்தக் கேள்விகளுக்குத் தந்தை பெரியார் எழுப்பிய கேள்வியிலிருந்து விடையைக் காணலாம்.

“இன்றைக்கும் தொல்காப்பியம் இருக்கிறது. அதுவும் இலக்கியம்தான் அதிலும் ஆரியம் புகுந்திருக்கிறது. விளம்பரமாக இருக்கும் மற்ற இலக்கியங்கள் இராமாயணம், பாரதம், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம் இவைதான். பெரும்பாலானவை வடமொழியிலிருந்து காப்பியடிக்கப்பட்ட நூல்கள். மற்றவை அவற்றை அனுசரித்துச் செய்யப்பட்டவை. ஆரியர் வருகைக்கு முன்பு தமிழர் பண்பு எப்படி இருந்தது, இன்றைக்கு எப்படி இருக்க வேண்டியதாகும் என்பதைக் காட்ட நமக்கு இலக்கியம் இருக்கிறதா?” (விடுதலை 3.9.1956)



ஆம், ஆரியம் புகுந்ததால் ஏற்பட்ட புண்கள்தாம் தமிழ் இலக்கியங்களில் காணப்படுபவை. அந்தப் புண்களை அடையாளம் காட்டவே இக்கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கருத்தரங்கம் நடைபெற்றால் அதில் தாக்கப்படுவது ஆரியர்களின் வருண தருமமும், மனு தருமமுமே ஆகும். தமிழ் இலக்கியங்களில் பெண் வன்கொடுமைகளுக்கு, ஆரியப் பண்பாடு கடைபிடிக்கப்பட்டதே காரணம் என்னும் உண்மை நிறுவப்பட்டுவிடும். தமிழ் வேறு, இந்து மதம் வேறு என்பது தெளிவாகத் தெரிந்து விடும்.

கலைஞர் அவர்கள் பூந்தோட்டம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில்,

“சிலப்பதிகாரம் முள் இடை ரோஜா மலர் !
கம்பராமாயணம் முள் இடை கள்ளிமலர் !”

என்று அழகாகத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஆரியக் கலப்பை எடுத்துரைத்தார்.

தமிழ் இலக்கியங்களில் முள்ளாய்க் குத்திக் கொண்டிருக்கும் ஆரிய நச்சுக் கலப்பைத் தமிழர்கள் அறிந்து விடக் கூடாது, அறிவு பெற்று விடக் கூடாது என்பதே அவர்கள் நோக்கம்.

கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ளும் வழக்கம் அவர்களுக்கு என்றுமே இருந்ததில்லை. கருத்தரங்கம் முடிந்ததற்குப் பின்னர், தங்கள் கூற்றுகளை ஆதாரங்களோடு எடுத்துரைத்து மறுக்கவேண்டியது தானே. ஒரு பக்கம் நம்முடைய கருத்துரிமையைத் தடை செய்யும் அதே நேரத்தில், இன்னொரு பக்கம் பொய்யானவற்றை உருவாக்கும் பணிகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதனால் தான் ‘திருக்குறள் மனுதருமத்தின் சாரம்’ என்று பொய்யான நூலை வெளியிடுகிறார்கள். நாம் அந்நூலுக்குக் கருத்தால் தான் பதிலடி கொடுத்தோம்.

இலக்கியங்களில் கைவைப்பதோடு மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. அறிவியலிலும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டுகிறார்கள்.

இந்திய அறிவியல் கழக (Indian Science Congress) கருத்தரங்குகளில் அவர்கள் சமர்ப்பித்த கட்டுரைகளும் ஆற்றிய உரைகளும் உலகம் முழுவதும் கேலிக்குள்ளான நிகழ்வுகளை நாம் கடந்த நான்கு ஆண்டுகளில் பார்த்தோம். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய அறிவியல் கழக மாநாட்டில், ஆகாய விமானங்களை வேத காலத்திலேயே இங்குள்ள ரிஷிகள் கண்டுபிடித்ததாக ஒரு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது. அது உலகம் முழுவதும் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. இந்தியாவில் பிறந்த நோபல் பரிசு பெற்ற வேதியியல் அறிஞர் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் இந்திய அறிவியல் கழக மாநாட்டை ‘சர்க்கஸ்’ என்று விமர்சிக்கும் அளவிற்கு அது அமைந்திருந்தது. மேலும் பிதாகரஸ் தேற்றத்தையும், அல்ஜீப்ராவையும் இந்தியர்களே கண்டுபிடித்து உலகிற்கு அளித்தார்கள் என்றும், மாட்டுச் சாணத்தில் இருக்கும் ஒரு பாக்டீரியா, எந்தப் பொருளையும் 24 காரட் தங்கமாக மாற்றும் தன்மை கொண்டது என்றும், மகாபாரதத்தில் பயன்படுத்திய தலைக்கவசம் “மார்ஸ்” கோளில் கிடைக்கும் என்றும் பல அறிவுக்கு ஒவ்வாத உளறல்களை இந்திய அறிவியல் மாநாட்டில் அரங்கேற்றினார்கள். நவீன மருத்துவத்தை விட, சங்கு ஊதுவதன் மூலமாக நாம் உடல்நலத்தோடு வாழ முடியும் என்று ஒரு மூத்த ஐஏஎஸ் அதிகாரி ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார். மேலும் ‘சிவபெருமானே இந்த உலகின் மிகச்சிறந்த சுற்றுச்சூழல்வாதி’ என்றும் ஒரு ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்க இருந்தார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி அவர்கள் மகாபாரதக் கதையில் வரும் கர்ணனையும், யானைமுக இந்துக் கடவுளான கணேசனையும் சுட்டிக்காட்டி இங்கே மரபணு அறிவியலும், நவீன ப்ளாஸ்டிக் சர்ஜரியும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்தன என்று இந்திய அறிவியல் கழக மாநாட்டில் பேசியது உலக ஊடகங்களில் இந்தியாவின் மானத்தை வாங்கியது. இராமாயண மகாபாரத அருங்காட்சியங்கள், ஆய்வுகள் எனத் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அறிவியல் உலகத்திற்குள்ளேயே பாம்பாக நுழையும் ஆரியம், இலக்கியத்தையா விட்டுவைக்கும்? தமிழ் இலக்கியங்கள் அறிவின் வழி சீர்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆரியப் பண்பாட்டினர் நம்முடைய அரசாங்கத்தைக் கொண்டே நமக்கு எதிரான வேலைகளைச் செய்வது வரலாற்றின் தொடர்ச்சி ஆகும்.

அதிலும் மாஃபாய் பாண்டியராஜன் என்கிற ஒருவரை அவர்கள் கலை, பண்பாடு மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக வைத்திருப்பது எந்தப் பண்பாட்டை வளர்ப்பதற்கு என்பது மீண்டும் ஒரு முறை தெளிவாக விளங்குகிறது.

நீட் தேர்வை தமிழகத்தில் தடை செய்ய இயற்றப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகள் இன்னும் குடியரசுத் தலைவரின் கையொப்பம் பெறாமல் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகக் கொள்கை முடிவை எடுக்காமல் இன்று அந்த ஆலை மீண்டும் செயல்படத் தொடங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கர்நாடக அரசு மேகதாது அணை கட்ட மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று இருக்கிறது. கஜா புயலால் மக்கள் வாழ்விழந்து தவிக்கின்றனர், இவ்வளவு வேலைகள் இருக்க இவற்றையெல்லாம் செய்யமுடியாமல் திருச்சியில் ஒரு கல்லூரியில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கத்தை தடுத்து நிறுத்தியதுதான் இந்த அரசின் ஆகச்சிறந்த சாதனையாக இருக்கிறது. ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.